| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயர்துளி | | |
|---|---|---|
| **மழைத்துளி சேமிப்பீர்** | | **குடிநீரை பெருக்குவீர்** |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அவசரக்கூட்டம் வருகிற 13.04.2023 – ஆம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும். தவறாது கலந்து கொள்ளும்படி உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வாரசந்தை பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023 ன் கீழ் ரூ.173.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பகுதியில் உள்ள குப்பைகள் அகற்ற வேண்டியுள்ளதால், குப்பைகளை அகற்ற செலவின தொகை ரூ.60,000/–ஆகும். அச்செலவின தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2,மேற்காண் செலவின தொகை ரூ.60,000/–னை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், பணியின் அவரச அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.447**

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11919/2022/CFC–1 நாள்.07.03.2023 இன்படி 15 வது நிதிக்குழு மானியம் (2022–23) (Untied Grant ) திட்டத்தின் கீழ் ரூ.62.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டிற்கு கீழ்கண்ட சாலை பணிகளை செய்வதற்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of the road | Length | Width | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | Krishna Nagar extension 4th Main Road (057001R0035) (2015-16) | 93.00 | 6.00 | 62.00 |
| 2 | Kaliyannan 2 extension (057001R0047)(2011-12) | 219.00 | 5.00 | |
| 3 | Baskaran (057012R0403) (2016-17) | 132.00 | 7.00 | |
| 4 | Kuppammal layout (057022R0620) (2011-12) | 215.00 | 5.00 | |
| 5 | Kuppammal layout 1 (057022R0621) (2011-12) | 85.00 | 4.50 | |
| 6 | Kuppammal layout 2 (057022R0622) (2011-12) | 25.00 | 4.20 | |
| 7. | Kuppammal layout 3 (057022R0623) (2011-12) | 77.00 | 4.20 | |
| 8. | Kuppammal layout 4 (057022R0624) (2011-12) | 74.00 | 4.20 | |
| 9 | Kuppammal layout 5 (057022R0625) (2011-12) | 42.00 | 4.20 | |
| 10. | Kuppan Street (057022R0835) (2011-12) | 159.00 | 3.20 | |
| 11. | Peter Street 057030S0080 (2011-12) | 89.00 | 2.90 | |
| 12. | Peter Street Cross (057030R0836(2011-12) | 82.00 | 3.20 | |
| 13. | Sivashanmugam Veethi Ist Lane ((057022R0728) | 153.00 | 5.50 | |
| 14. | SIVASHANMUGAM STREET, FIRST STREET (057022R0726) | 165.00 | 5.00 | |
| | Total | 1610.00 | | |

(ந.க.எண்.1240/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு:-** 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்

2.மேற்படி பணி திட்ட பணியாக உள்ளதால் சாலை பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.448**

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்: 33552/2022/EA2-SWM-4, நாள்:10.01.2023-ன்படி இந்நகரில் உள்ள 30 வார்டுகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் முதல் நிலை சேகரம் செய்யும் பணியினை மேற்கொள்ள ஆண்டு ஒன்றிற்கு ரூ.430.01 இலட்சம் மதிப்பீட்டில் 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த சேவை வழங்குநரை தேர்வு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 001/2022/DO1 நாள் : 01.02.2023 இன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 27.03.2023 ஆம் தேதி அன்று பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தொழில் நுட்ப தகுதியினை பூர்த்தி செய்துள்ளதால் அவ்விரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை (Financial Bid) 30.03.2023 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்பட்டது.

அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு டன் கழிவுகள் தரம் பிரித்து சேகரித்து செயலாக்க மையங்களில் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ரூபாயில் | விகிதாச்சாரம் |
|---|---|---|---|
| 1. | M/s. LD MAN POWER SOLUTIONS NO. 1270/A PHASE –II, WATER FALLS ROAD, SATHUVACHARI, VELLORE – 632009 | ரூ. 5,641/- | 0.03% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு |
| 2. | M/s . KAY YES CONSTRUCTIONS, NO. 4/17, SENJI KRISHNA PURAM, (VIA) LATTERI – 632 202, VELLOR – 632 009. | ரூ. 5,645/- | 0.04% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகம் |

இப்பணிக்கு வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்ததில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள LD Man Power Solutions, No. 1270/A, Phase –II, Water Falls Road, Sathuvachari, Vellore அவர்களின் விலைவிகிதமானது 0.03% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவாக வழங்கியுள்ளதால் அந்நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை ஏற்றுக்கொள்ளவும், தற்பொது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 18276/2022/CFC-1 நாள்: 21.03.2023 கடிதத்தில் 15வது மத்திய நிதி குழுவில் இருந்து இந்நகராட்சிக்கு 6 எண்ணம் BOV வாகனங்களும், 6 எண்ணம் LCV வாகனங்களும், கொள்முதல் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் அவ்வாகனங்களை மேற்குறிப்பிட்ட பணிக்கான ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் படி வாடகைக்கு வழங்க வேண்டியுள்ளதால் அவ்வாகனங்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறான தொகையினை ஏற்கனவே

இப்பணிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை திருத்தி அமைத்து அதன் படி விலைவிகிதம் நிர்ணயம் செய்து பணி உத்திரவு LD Man Power Solutions, No. 1270/A, Phase –II, Water Falls Road, Sathuvachari, Vellore அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1609/2022/எச்1)

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு** | : | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. ஒப்பந்த நிபந்தனைகளின் படி குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய LD MAN POWER SOLUTIONS, NO.1270/PHASE–II, WATERWALLS ROAD, SATHUVACHARI, VELLORE அவர்களுக்கு ஓர் ஆண்டிற்கு பணி செய்ய உத்திரவிடவும் அதன் பிறகு நிறுவனத்தின் செயல்பாடுகளின் அடிப்படையில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ந்து பணி வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.449**

4. இந்நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய மற்றும் பொதுகழிப்பிடங்களில் கழிப்பிடங்கள் செயல்படும் நேரம், பராமரிப்பாளர் பெயர் மற்றும் அவரது விவரங்கள் போன்றவற்றை கழிப்பிடங்களின் சுவரில் பெயின்ட் மூலம் எழுதிடவும் கழிப்பிடங்களுக்கு அருகில் பொதுமக்கள் அறியும் வண்ணம் "கழிப்பிடம் செல்லும் வழி" என்னும் விளம்பர பலகை வைத்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10000/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.784/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.450**

5. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 28.03.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் வினியோக குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் கசிவுகள் , வெடிப்புகள் மற்றும் மாற்றியமைக்கும் பணிகள் ஆகியவற்றை தனியார் சேவையை பயன்படுத்தி 2023– 24 ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 900000 | **திரு.ஸ்ரீ.சரவணன் & கோ ஒப்பந்ததாரர்** | 0.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.T.சுகுமார் ஒப்பந்ததாரர் | 1.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகரராட்சிக்குட்பட்ட சிறுமின்விசை பம்பிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்யப்பட்ட குழாய்களில் , ஏற்படும் கசிவுகள் , உடைப்பு , பழுதுகள் மாற்றி அமைக்கும் பணிகள் மற்றும் | 100000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | கைபம்பு பழுது சரிசெய்யும் பணியினை தனியார் சேவையை பயன்படுத்தி 2023–24 ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கோள்ளுதல் | | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 4.85 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28 வீட்டு வசதி வாரியம் வேலப்பன் வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து HDPE Tank அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 60000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.18 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 4. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளி –250 LPH , நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி –250 LPH , நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி –250 LPH , நகராட்சி மேல்நிலைப்பள்ளி மொடச்சூர் பள்ளிகளில் உள்ள (Ro Plant ) தனியார் சேவை மூலம் வருடாந்திர 2023–24 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்தல் | 300000 | M/s. மாருதி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர் | 0.13 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 1.13 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |
| 5. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 வாய்க்கால் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்தில் தரைத்தளம் சரிசெய்தல் பணி | 44000 | **V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.23 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | K.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 106 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

**அலுவலகக்குறிப்பு :–**

1. .மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.ஸ்ரீ.சரவணன் & கோ** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3. மேற்படி பணிகளில் வ.எண்.2 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

3. மேற்படி பணிகளில் வ.எண்.3 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

4. மேற்படி பணிகளில் வ.எண்.4 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. மாருதி இன்ஜினியரிங்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

5. மேற்படி பணிகளில் வ.எண்.5 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. ஸ்ரீ சரவணன் & கோ ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**வ.எண்.2 M/s சஞ்சய் எலெக்ரிக்கல்ஸ் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**வ.எண்.3 M/s சஞ்சய் எலெக்ரிக்கல்ஸ் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**வ.எண்.4 M/s மாருதி இஞ்சினியரிங் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**வ.எண்.5 V.தங்கராஜ் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.451**

**6.** இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 31.03.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.10 ல் சாய் அபிராமி நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 170000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.23 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.எக்ஸ்புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.48 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

(ந.க.எண்.1982/2022/இ1)
<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளுக்கு வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**M/s** சஞ்சய் எலெக்ரிக்கல்ஸ் –ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
**மன்றத்தீர்மான எண்.452**

6. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 10.04.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | **காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம்** கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதலுக்கான கட்டிடம் அமைத்தல் | 1520000 | **M/s.VBN பில்டர்ஸ் தண்ணீர் பந்தல் காலணி திருப்பூர் ஒப்பந்ததாரர்** | 0.01 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | ஸ்ரீ .பண்ணாரியம்மன் பில்டர்ஸ் சின்ன மொடச்சூர் கோபிசெட்டிடிபாளையம். ஒப்பந்ததாரர் | 1.00 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

(ந.க.எண்.160/2023/சி1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. வ.எண், 1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.VBN பில்டர்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்,

**அலுவலக குறிப்பு 1.M/s VBN பில்டர்ஸ் –ன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.453**

8. நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023 ன் படி 10 x 11 (110) சதுரடி அளவில் 12 கடைகள் ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது எனவும், மேற்படி கடைகளின் கட்டுமான பணிகள் 20.05.2023 ம் தேதியில் கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது எனவும் நகராட்சி பொறியாளர் அவர்கள் தனது 05.04.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும் கடைகளுக்கு அரசு விலைவிகிதத்தின்படி மாதவாடகை ரூ.3,500/– என நிர்ணயம் செய்து வழங்கியுள்ளார்.

மேற்படி கடைகளுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் மாத வாடகை நிர்ணயம் செய்து வழங்க இந்நகராட்சி அலுவலர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டு, மேற்படி குழு புதியதாக கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு மாதவாடகை ரூ.10,000/– நிர்ணயம் செய்யலாம் எனவும், ஏல முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/– நிர்ணயம் செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது. வருவாய் ஆய்வர் 10.04.2023ம் தேதிய தனது குறிப்பில் மன்றத்தின் அனுமதி பெற்று பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( Pre Auction cum Tender) கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே அரசாணை (நிலை) எண். 92. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(நநி4) நாள் 03.07.2007 மற்றும் 2021–2022ம் ஆண்டிற்கான கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஏல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு,பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு மாதவாடகை ரூ.10,000/– மற்றும் ஏல முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/– என நிர்ணயம் செய்யவும், மேற்படி கடைகளை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு வாடகைக்கு விட, முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.773/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.454**

9. நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில், தூய்மை பாரத் திட்டம் (URBAN 2.0) 2022–2023ன் படி, நவீன பொது கழிப்பிடம் மற்றும் குளியலறை (SMART TOILET) ரூ.36.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது எனவும்,

மேற்படி பொது கழிப்பிடத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்கு நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என நகராட்சி பொறியாளர் அவர்கள் தனது 05.04.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதன்படி வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 06.04.2023 ம் தேதிய குறிப்பில் மேற்படி நவீன பொது கழிப்பிடம் மற்றும் குளியலறையில் பின்வரும் விபரப்படி நபர் ஒன்றுக்கு கட்டணம் வசூல் செய்யலாம் எனத்தெரிவித்துள்ளார்.

| வ. எண் | விபரம் | கட்டண விகிதம் |
|---|---|---|
| 1 | சிறுநீர் கழிக்க | ரூ.3/- (ரூபாய் மூன்று) |
| 2 | மலம் கழிக்க | ரூ.5/- (ரூபாய் ஐந்து) |
| 3 | குளியலறை | ரூ.10/-(ரூபாய் பத்து) |

மேலும் ஏல முன்வைப்புத் தொகை ரூ.5,00,000/- நிர்ணயம் செய்யலாம் எனவும், குத்தகை உரிமத்திற்கு சமர்பிக்க வேண்டிய சொத்து மதிப்பு / வங்கி உத்தரவாத சான்று ரூ.5,00,000/-நிர்ணயம் செய்யலாம் எனவும், சொத்து மதிப்பு / வங்கி உத்தரவாத சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.3,00,000/- நிர்ணயம் செய்யலாம் எனத்தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி கட்டண விகிதங்கள் மற்றும் ஏல முன்வைப்புத் தொகை, சொத்து மதிப்பு / வங்கி உத்தரவாத சான்று மதிப்பு ஆகியவற்றை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி பெற்று, மேற்படி நவீன பொது கழிப்பிடம் மற்றும் குளியலறையினை, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் குறிப்பின்படி, 2021-2022ம் ஆண்டிற்கான கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஏல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன பொது கழிப்பிடத்தில் வசூல் செய்யப்பட வேண்டிய கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்வது குறித்தும், ஏல முன்வைப்புத் தொகை ரூ.5,00,000/- நிர்ணயம் செய்வது குறித்தும், சொத்து மதிப்பு / வங்கி உத்தரவாத சான்று ரூ. 5,00,000/- நிர்ணயம் செய்வது குறித்தும், மன்றத்தின் ஒப்புதலுக்கும், மேற்படி நவீன கட்டண கழிப்பிடத்தை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.772/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** :

1. நவீன கட்டண கழிப்பிடத்தில் வசூல் செய்ய வேண்டிய கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.
2. ஏல முன்வைப்புத் தொகை ரூ.5,00,000/- என நிர்ணயம் செய்வது குறித்தும், சொத்து மதிப்பு சான்று ரூ.5,00,000/- என நிர்ணயம் செய்வது குறித்தும், சொத்து மதிப்பு சான்று இல்லதாவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.3,00,000/- நிர்ணயம் செய்வது குறித்தும் மன்றம் முடிவு செய்யலாம்.
3. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு வரிசை எண்.1,2, மற்றும் 3 ன் கட்டண விகிதம் அனுமதிக்கப்பட்டது.**
**2).ஏல முன் வைப்புத்தொகை ரூ.5,00,000/- ம் சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத்தொகை ரூ.3,00,000/- என்கிற நிர்ணயத்திற்கு அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.455**

10. இந்நகராட்சிக்கு சொந்தமான உயிரி எரிவாயு கலனின் Diggester Tank இல் விரிசல் ஏற்பட்டு மக்கும் கழிவுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மீத்தேன் வாயு வெளியேறி விடுகிறது. எனவே இம்முறை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் உயிரி எரிவாயு கலனின் Diggester Tank - இல் சேர்ந்துள்ள கசடுகளை சுத்தம் செய்து Fiber Reinforce Polimer (FRP Work) பணி மேற்கொண்டு கலனின் உள்ள மின்னாக்கி இயந்திரத்தினை சர்வீஸ் செய்தும் கலனில் ஏற்பட்டுள்ள பழுதுகளை முழுவதும் சரிசெய்து தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளதால் இப்பணியினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினம் ரூ.2.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது(ந.க.எண்.782/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.456**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 4MLD திறன் கொண்ட STP Cum FSTP திட்டம் Used Water Management Component Of SBM 2.0 for the year 2022-2023 ல் கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டில் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Name of the Municipality | Description of the Work | Estimate Cost | Funding Pattern | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | GOI | State | ULB |
| 1 | Gobichettipalayam | Construction Of 4 MLD STP Cum 20 KLD FSTP | 9.96 | 4.98 | 3.2868 | 1.6932 |
| | | Providing Interception and Diversion Works for collection of used waste water to STP cum FSTP site | 4.68 | 2.34 | 1.5444 | 0.7956 |
| | | Total | 14.64 | 7.32 | 4.8312 | 2.4888 |

(ந.க.எண்.847/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு** :- 1.மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. பதிவு செய்யப்பட்டது.**
**2.அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.457**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மானியம், 2022-2023 Tied Grand -ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான LCV மற்றும் BOV வாகனங்களை கீழ்க்கண்ட விவரப்படி வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 18276/2022/CFC -1 நாள் 21.03.2023-படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன் விவரம்

| வ.எண் | விவரம் | தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | BOV 6 எண்ணிக்கை | 12.00 |
| 2 | LCV 6 எண்ணிக்கை | 43.80 |
| | மொத்தம் | 55.80 |

**அலுவலகக்குறிப்பு**:- 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.458**

(ஒப்பம்) - என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி